# தேசபக்தி
DHESA BAKTHI
நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068   இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:160 ★10.10.2026 ★தமிழ் நாளிதழ் ★சனிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:160 ★10.10.2026 ★TamilDaily ★Saturday ★Page-4 ★Price-₹5/- Chennai


# பிரதமர் மோடி நாளை சென்னை வருகை: பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

பிரதமர் மோடி, நாளை டெல்லியில் இருந்து தனி விமானத்தில் புறப்பட்டு, காலை 11.10 மணிக்கு சென்னை பழைய விமான நிலையம் வந்தடைகிறார். அங்கிருந்து காரில் போரூர் சென்று, மெட்ரோ ரெயில் திட்ட தொடக்க விழாவில் கலந்து கொள்கிறார். பின்னர் கிண்டி ஐ.ஐ.டி.யில் நடைபெறும் அரசு விழாக்களில் பங்கேற்கிறார். தொடர்ந்து நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு மாலை 4 மணிக்கு சென்னை பழைய விமான நிலையத்தில் இருந்து தனி விமானம் மூலம் மீண்டும் டெல்லி புறப்பட்டுச் செல்கிறார். சுமார் 5 மணி நேரம் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

'ரோடு ஷோ'

முன்னதாக, விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் போரூர் செல்லத் திட்டமிடப் பட்டிருந்தது. தற்போது அந்த திட்டம் மாற்றப்பட்டு, அனைத்து பயணங்களையும் காரில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. வழியில் சில இடங்களில் ரோடு ஷோ நடத்தவும் திட்ட மிடப்பட்டு உள்ளதால், கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யுமாறு எஸ்.பி.ஜி. அதிகாரிகள்



கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதையடுத்து, சென்னை பழைய விமான நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்று முதல் ஞாயிற்றுக் கிழமை இரவு வரை 3 நாட்களுக்கு எஸ்.பி.ஜி. அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப் பட்டுள்ளன.

இந்த 3 நாட்களுக்கும் விமான நிலையத்தில் உச்சக்கட்ட பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

டிரோன்கள் பறக்க தடை

விமான நிலையப் பகுதிகளில் டிரோன்கள் காற்று அடைக்கப்பட்ட பலூன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. கொரியர், கார்கோ நிறுவனங்களின் நிரந்தர ஊழியர்கள் புகைப்பட அடையாள அட்டைகளை அணிந்து பணிக்கு வர உத்தரவிடப்பட்டுள்ளது. ஓடுபாதை பராமரிப்புப் பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் தற்காலிகப் பணியாளர்கள் பணிபுரியவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தைச் சுற்றியுள்ள ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் தீவிர சோதனை நடத்தவும், சந்தேகத்துக்கிடமான நபர்களை கண்காணிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. வழக்கமான மூன்றடுக்கு பாதுகாப்புடன் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் ஞாயிற்றுக்கிழமை இரவு வரை அமலில் இருக்கும் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.






## முதியோரின் அனுபவம் இளைய தலைமுறைக்கு வழிகாட்டும்; ஆட்சியர் வந்தனா கார்க் வலியுறுத்தல்

முதியோரை அன்புடன் அரவணைத்து, அவர்களின் அனுபவங்களையும் பாரம்பரிய அறிவையும் இளைய தலைமுறையினர் கற்றுக்கொள்ள வேண்டும் என்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வலியுறுத்தினார்.

திருவண்ணாமலை மாநகராட்சி மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் தலைமுறைகளுக்கிடையேயான பிணைப்பை வலுப்படுத்துதல் மற்றும் மூத்த குடிமக்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை (அக். 9) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

முதிய குடிமக்களின் நல்வாழ்வை உறுதி செய்வது இன்றைய தலைமுறையினரின் முக்கியக் கடமையாகும். அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், பாதுகாப்பான சூழல், நிதிச் சுதந்திரம் மற்றும் அன்பான பராமரிப்பு ஆகியவை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன், அவர்கள் தனிமையின்றியும் கண்ணியத்துடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

பெற்றோர்கள் மற்றும் முதியோரைப் பராமரிப்பது தொடர்பான சட்டப் பாதுகாப்புகள், அரசின் நலத்திட்டங்கள், டிஜிட்டல் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் காவல்துறை மூலம் வழங்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து இளைய தலைமுறையினர் அறிந்திருக்க வேண்டும்.

தலைமுறைகளுக்கிடையேயான பிணைப்பை வலுப்படுத்தும் இத்தகைய நிகழ்ச்சிகள், இளைய தலைமுறையினரும் முதிய தலைமுறையினரும் தங்களது அறிவு, அனுபவம், திறமைகள் மற்றும் பாரம்பரியக் கலாசாரத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கின்றன. மாணவர்கள் தங்களது தாத்தா, பாட்டி உள்ளிட்ட மூத்த குடிமக்களைப் பள்ளிக்கு அழைத்து வந்து, அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள், பாரம்பரிய அறிவு, பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாட்டு விழுமியங்களை அறிந்துகொள்ள வேண்டும்.

முதியோரிடம் இருந்து கற்றுக்கொள்ளும் நல்ல பண்புகளையும் வாழ்க்கைப் பாடங்களையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வது அவசியம். மாணவர்கள் அனைவரும் தங்களது மூத்த தலைமுறையினரிடம் அன்பு செலுத்துவதுடன், அவர்களின் அறிவையும் அனுபவத்தையும் மதித்துக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் தலைமையில் மூத்த குடிமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் முதியோர் பாதுகாப்பு உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

முதியோருக்கு எதிராக வாய்மொழியாகவோ, வன்முறைமூலமாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ இழைக்கப்படும் அனைத்து வகையான கொடுமைகளையும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுக்கவும், அவற்றை முற்றிலும் ஒழிக்கத் தனிப்பட்ட முறையிலும், தேவைப்பட்டால் அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடனும் பாடுபடுவதாக உறுதியேற்றனர். மேலும், முதியோரின் உரிமைகளை மதித்து, அவர்களுக்கு உரிய அன்பு, பாதுகாப்பு மற்றும் ஆதரவை வழங்கி, அவர்கள் கண்ணியத்துடன் வாழ உறுதுணையாக இருப்பதாகவும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

தொடர்ந்து, நிகழ்ச்சியைச் சிறப்பிக்கும் வகையில் பள்ளி மாணவர்கள் தங்களது தாத்தா, பாட்டியுடன் இணைந்து கேக் வெட்டினர். இதையடுத்து, மூத்த குடிமக்கள் மற்றும் பள்ளி மாணவிகள் பங்கேற்ற விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

தலைமுறைகளுக்கிடையேயான பிணைப்பு மற்றும் மூத்த குடி மக்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி, முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், மாவட்டக் கல்வி அலுவலர் (பொறுப்பு) தமிழ்செல்வன், பள்ளித் தலைமை ஆசிரியர் சுதா, மூத்த குடிமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேனி மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்யவும் மாதந்தோறும் நடத்தப்படும் உணவுப்பொருள் வழங்கல் சம்பந்தமான பொதுமக்கள் குறைதீர்கூட்டம்

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது. இ.ஆ.ப., அவர்கள் பொது விநியோகத்

திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும் மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்யவும் மாதந்தோறும் நடத்தப்படும் உணவுப்பொருள் வழங்கல் சம்பந்தமான

பொதுமக்கள் குறைதீர்கூட்டம் (Civil Supplies Grievance meeting) மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு முகாம் இம்மாதம் நாளை (10.10.2026) நடத்தப்பட உள்ளது.

அதன்படி, தேனி மாவட்டத்தில் அக்டோபர் 2026ஆம் மாதத்தில் நாளை (10.10.2026) பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் கூட்டம் நடத்திட தேர்வு செய்யப்பட்ட கிராமங்கள் மற்றும் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் விவரம் பின்வருமாறு

| வ. எண் | வட்டம் | முகாம் நடக்கும் கிராமம் | கடை எண் | முகாம் நடக்கும் இடம் | மேற்பார்வையாளராக நியமனம் செய்யப்படும் துணை ஆட்சியர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | பெரியகுளம் | டி.கல்லுப்பட்டி கிராமம் | 23BC0011PN மற்றும் 23BC0011P1 | டி.கல்லுப்பட்டி கிராம நியாயவிலைக்கடை | திரு.தவலேந்து, இ.ஆ.ப. சார் ஆட்சியர், பெரியகுளம் |
| 2. | தேனி | திருச்செந்தூர் கிராமம் | 23AP036P1 | திருச்செந்தூர் கிராம நியாய விலைக்கடை | திருமதி ஜெகங்கா ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஅலுவலர், தேனி. |
| 3. | ஆண்டிபட்டி | ஒக்கரைப்பட்டி கிராமம் | 23CO005PN | ஒக்கரைப்பட்டி கிராம நியாயவிலைக்கடை | திரு.பஞ்சாபகேசன் உதவிஆணையர் (கலால்) தேனி. |
| 4. | உத்தம பாளையம் | காமாட்சிபுரம் கிராமம் | 23PP072PN | காமாட்சிபுரம் நியாய விலைக்கடை | திரு.ஐ.சையது முகைதீன் இப்ராஹிம், வருவாய் கோட்டாட்சியர், உத்தமபாளையம். |
| 5. | போடி நாயக்கனூர் | காமராஜபுரம் கிராமம் | 23EP011PY | காமராஜபுரம் கிராம நியாயவிலைக் கடை | திரு.நல்லையா மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், தேனி. |

இக்குறைதீர் முகாமில் பொதுமக்கள் பொது விநியோக கடைகள் சம்பந்தமான குறைபாடுகள் குறித்தும், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், முகவரி மாற்றம் மற்றும் கடை மாற்றம் குறித்தும் மனு செய்யலாம்.

பொதுமக்கள்தங்கள்குறைகளைமுன்கூட்டியே சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர், கூட்டுறவு சார் பதிவாளர் மற்றும் நியாய விலைக்கடை நடத்தும் நிறுவன அலுவலர்களுக்கு மனு மூலமும் தெரிவிக்கலாம்.

முன்கூட்டியே பெறப்படும் புகார்கள் மற்றும் குறைபாடுகள் வகைபாடு வாரியாக பிரிக்கப்பட்டு உடனுக்குடன் அவை தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முகாம் நாள் அன்று பொதுமக்களுக்கு நடவடிக்கை விவரம் தெரிவிக்கப்படும்.

மேலும், முகாம் நாள் அன்று பெறப்படும் புகார்கள், குறைபாடுகள் மீது 30 தினங்களுக்குள் நடவடிக்கை மேற்கொண்டு பதில் தரப்படும்.

எனவே, பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நுகர்வோர் நடவடிக்கை குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இம்முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## ராகுல்காந்தி இன்று சென்னை வருகை; முதல்அமைச்சர் விஜய்யை சந்தித்து பேசுகிறார்

இந்திய கல்வி முறையில் நடைபெறும் முறைகேடுகள், நீட் உள்ளிட்ட தேர்வுத்தாள் கசிவுகள், கல்விக் கட்டண உயர்வு மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களை திரட்டி நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி 'மாணவர்களின் குரல்' என்ற நிகழ்ச்சி வாயிலாக அவர்களிடம் பேசி வருகிறார். அதன்படி, ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் தொடங்கி, மராட்டிய மாநிலம் புனே மற்றும் நாசிக் நகரங்கள், மத்தியபிரதேசம் மாநிலம் இந்தூர் போன்ற இடங்களில் மாணவர்கள் குரல்' நிகழ்ச்சி நடத்திய ராகுல் காந்தி, இன்று (சனிக்கிழமை) சென்னையில் உள்ள தீவுத்திடலில் மாணவர்கள் முன்னிலையில் பேச இருக்கிறார். இதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக பிரமாண்ட பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை தீவுத்திடலில் ராகுல்காந்தி பங்கேற்கும் 'மாணவர்கள் குரல்' நிகழ்ச்சி ஏற்பாடுகளை தமிழ்நாடு காங்கிரஸ் மாநில தலைவர் மாணிக்கம் தாகூர் பார்வையிட்டார். அவருடன், மேலிட பொறுப்பாளர் குலாம் அகமது மிர், இணை பொறுப்பாளர் நிவேதித் ஆல்வா, அமைச்சர்கள் ராஜேஷ்குமார், விஸ்வநாதன், சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் தாரகை கத்பர்ட் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இன்று மதியம் 12.30 மணிக்கு சென்னை விமான நிலையம் வருகை தரும் ராகுல் காந்தி, முதல்அமைச்சர் விஜய்யை அவரது இல்லத்தில் (நீலாங்கரையில் மதியம் 1.30 மணிக்கு) சந்திக்கிறார். பின்னர், சென்னை தீவுத் திடலில் நாளை மாலை 5 மணியளவில் நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பங்கேற்கும் ' மாணவர்களின் குரல்' நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இதற்காக தமிழ்நாடு முழுவதும் இணையதளம் மற்றும் கியூ.ஆர். கோடு மூலம் நடத்தப்பட்ட மாணவர்கள் பதிவில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில், 10 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் மட்டுமே பங் கேற்க உள்ளனர். ராகுல்காந்தி கலந்து கொள்ளும் மாணவர்கள் நிகழ்ச்சிக்காக பிரமாண்ட பந்தல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பந்தலுக்கு வெளியேயும் ஏராளமானோர் நின்று கொண்டு ராகுல்காந்தி நிகழ்ச்சியை பார்ப்பதற்காக அகண்ட திரைகள் வைக்கப்பட்டுள்ளன. மேலும், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளும் உரிய முறையில் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளன. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், முன்னாள் கல்லூரி முதல்வர்கள் என முக்கிய மானநபர்கள் 350 பேருக்கு மட்டும் இருக்கை அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் இருந்து ஏராளமான கல்லூரிகளில் இருந்து மாணவ மாணவிகள் கலந்து கொள்ள உள்ளனர். மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வரும் ராகுல்காந்தி தாஜ் கன்னிமாரா ஓட்டலில் காங்கிரஸ் நிர்வாகிகள் உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்களை சந்திக்கிறார். நிகழ்ச்சி முடிந்து இரவு 9.30 மணியளவில் விமானம் மூலம் டெல்லி புறப்படுகிறார்.

# பூம்புகார் கைவினை, கைத்தறி கண்காட்சி தொடக்கம்;

# 50 முதல் 1.40 லட்சம் வரை பொருட்கள் விற்பனை

## அனைத்து பொருட்களுக்கும் 10% தள்ளுபடி': ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலையில் பாரம்பரிய கைவினைக் கலைகளையும், கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கில், பூம்புகார் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கைவினை மற்றும் கைத்தறிப் பொருட்கள் கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார். இக்கண்காட்சியில் ₹50 முதல் ₹1.40 லட்சம் வரையிலான பல்வேறு கைவினைப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், அனைத்துப் பொருட்களுக்கும் 10 சதவீத சிறப்புத் தள்ளுபடியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாநகராட்சி, திருவூடல் தெருவில் உள்ள வன்னியர் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சார்பில் அனைத்து வகையான கைவினை மற்றும் கைத்தறிப் பொருட்களின் கண்காட்சி, விற்பனை தொடக்க விழா 09.10.2026 அன்று நடைபெற்றது.

கண்காட்சியைமாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்து, அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்டார்.

தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலம் தமிழகத்தின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கைவினைக் கலைகளைப் பாதுகாத்து வருகிறது. கைவினைஞர்களின் திறமைகளை அங்கீகரித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன், பாரம்பரியக் கலைகளை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில், திருவண்ணாமலையில் நடைபெறும் இக்கண்காட்சியில் 10 முதல் 15க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள் தாங்கள் தயாரித்த கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனைக்கு வைத்துள்ளனர். கைவினைஞர்களின் உழைப்புக்கும் திறமைக்கும் உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதுடன், பொதுமக்கள் பாரம்பரியப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்குவதற்கும் இக்கண்காட்சி வாய்ப்பளிக்கிறது.

கண்காட்சியில் பித்தளை விளக்குகள், கைவினைப் பரிசுப் பொருட்கள், பஞ்சலோகச் சிலைகள், பித்தளைச் சிலைகள், மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகள், மரச்சிற்பங்கள் மற்றும் பல்வேறு கலைப்பொருட்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், பெண்கள் பயன்படுத்தும் சுடிதார்கள், புடவைகள், நைட்டிகள், ஜம்போன் நகைகள், கைப்பைகள், பூஜைப் பொருட்கள், ஊதுபத்தி மாலைகள், செம்புப் பொருட்கள் மற்றும் கோயில் அலங்காரப் பொருட்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

பாரம்பரியக் கலைப் பொருட்கள் முதல் அன்றாடப் பயன்பாட்டுக்கான பொருட்கள் வரை பல்வேறு வகையான பொருட்கள் இடம்பெற்றுள்ளதால், அனைத்துத் தரப்பு மக்களும் தங்களுக்குத் தேவையானவற்றைத் தேர்வு செய்து வாங்கும் வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. பொருட்களின் விலை குறைந்தபட்சம் ₹50 முதல் அதிகபட்சம் ₹1,40,000 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், கண்காட்சியில் விற்பனை செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் 10 சதவீத சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.



இக்கண்காட்சி 09.10.2026 முதல் 18.10.2026 வரை நடைபெறுகிறது. பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டு, தங்களுக்குத் தேவையான கைவினை மற்றும் கைத்தறிப் பொருட்களை வாங்குவதன் மூலம் பாரம்பரியக் கலைகளின் வளர்ச்சிக்கும், கைவினைஞர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் காதித் துறை உதவி இயக்குநர் அன்பழகன், கைவினைப் பொருட்கள் உதவி இயக்குநர் மாதவன், அரசு கைவினைப் பொருட்கள் விற்பனை மேலாளர் கார்த்திக் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சிறுமியை பாலியல் ரீதியாக துன்புறுத்திய வழக்கில் குற்றவாளிக்கு 48 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை

ஆவடி காவல் ஆணையரகம் திருவேற்காடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், கடந்த 22.08.2022 அன்று



17 வயது சிறுமி காணாமல் போனது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில், காணாமல் போன சிறுமியை திருவேற்காடு பகுதியைச் சேர்ந்த நந்தகுமார் (வ/53) என்பவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தி, மிரட்டி வந்தது தெரியவந்தது. இதையடுத்து, குற்றவாளியை கைது செய்து, திருவேற்காடு காவல் நிலையத்தில் POCSO Act மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் (IPC) தொடர்புடைய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, இவ்வழக்கின் புலன் விசாரணை முடிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை திருவள்ளூர் மாவட்ட POCSO சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், வழக்கின் மீதான நீதிமன்ற விசாரணையில் குற்றவாளி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு நீதிமன்றம் குற்றவாளிக்கு பின்வருமாறு தண்டனை விதித்து இன்று 08.10.2026 தீர்ப்பளித்துள்ளது: மொத்தம் 48 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், ரூ.50,000/ அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், IPC பிரிவுகள் 376(1), 376(2)(n) மற்றும் POCSO Amendment Act, 2019 பிரிவு 5(1) r/w 6(1) ஆகியவற்றின் கீழ் விதிக்கப்பட்ட தண்டனைகள் ஒரே நேரத்தில் (concurrently) அனுபவிக்கவும், IPC பிரிவுகள் 328, 450 மற்றும் 506(i)ன் கீழ் விதிக்கப்பட்ட தண்டனைகள் தனித்தனியாக (separately) அனுபவிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



# திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு கோடி பனை விதை நடும் பணி துவக்க விழா

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், தாமரைப்பாக்கம் காட்டாங்கல் கால்வாயின் கரையோரப் பகுதிகளில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தனியார் தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் ஒரு கோடி பனை விதையை நடும் பணிகளை துவக்கி வைக்கும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் ச. கவிதா, பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.பிரகாசம் ஆகியோர் ஒரு இலட்சம் பனைவிதைகளை நட்டு வைத்து தொடங்கி வைத்தனர்.

கொசஸ்தலையாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் இராதாகிருஷ்ணன், இணை இயக்குநர் (வேளாண்மை) க.செல்வராஜு, மத்திய காவல்படை காவல்துறை துணைதலைவர்/முதல்வர் எம்.தினகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) க.வேதவல்லி, உதவி செயற்பொறியாளர் செந்தில், உதவி பொறியாளர் .உஷா, தனியார் தொண்டு நிறுவன தலைவர் செந்தூர்பாரி, செயலாளர் மோகன், திருவள்ளூர் வட்டாட்சியர் சரண்யா, மத்திய காவல் படை வீரர்கள் மற்றும் பல் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



**திண்டுக்கல் மாவட்டம் பழனியை அடுத்து அய்யம்பாளையம் அருகே உள்ள கோதை அம்மன் குளத்தில் விவசாயத்துக்கு பயன்பாட்டுக்கு இன்று பெயரில் விதிகளை மீறி லாரிகள் மூலம் கிராவல் மண் கொண்டு செல்லப்படுகிறது இதனை கண்டு கொள்ளாத பழனி தாலுகா இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்**

# சேத்துப்பட்டில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்தநாள் விழா

## கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்பு, அன்னதானம் வழங்கி கொண்டாட்டம்

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸின் 61வது பிறந்தநாளைமுன்னிட்டு, சேத்துப்பட்டு நகர பாமக சார்பில் பொதுமக்களுக்கு



இனிப்பு மற்றும் அன்னதானம்வழங்கிபிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு காமராஜர் பேருந்து நிலையத்தில்நடைபெற்ற இவ்விழாவுக்கு நகரத் தலைவர் வெற்றிசெல்வன் தலைமை வகித்தார். சாமிஸ் ஸ்டீல் ஜெயவேல், கமிட்டி பூங்காவனம், முன்னாள் நகரச் செயலாளர்கள் சாம்பசிவம், ஜெயம் சுரேஷ், கமிட்டி மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டப் பொருளாளர்பொன்னிவரவேற்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற மாவட்ட அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் பாலமூர்த்தி, கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட்டத்தைத் தொடங்கி வைத்தார். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டதுடன், அன்னதானமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் வடமலை, மாவட்டத் துணைத்தலைவர்பவித்ரா ஏழுமலை, மாவட்டத் துணைச் செயலாளர் ராந்தம் ஏழுமலை, தெற்கு ஒன்றியச் செயலாளர் தரணி, பெரணமல்லூர் ஒன்றியச் செயலாளர் சம்பத், நகரப் பொறுப்பாளர்கள் சத்யா பழனி, மகளிர் அணியைச் சேர்ந்த குமாரி பூபாலன், மதன் உள்ளிட்ட மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், கமிட்டி பூங்காவனம் தனது குடும்ப உறுப்பினர்களுடன் பாமகவில் இணைந்ததையடுத்து, அவருக்கு மாவட்ட அமைப்புச் செயலாளர் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., ஆற்காடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாள் இளைஞர் எழுச்சி தினத்தை முன்னிட்டு பள்ளிக்கல்வித்துறை,மாவட்டநிர்வாகம்சார்பில்நடைபெற்றமாவட்டஅளவிலான அறிவியல் கண்காட்சியினை பார்வையிட்டார். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.ம. மோகனா உள்ளார்.

### இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட

# கிராம ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சி திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சி திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.





இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் இன்று (09.10.2026) காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், சிறுவளையம் ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.48.53 இலட்சம் மதிப்பீட்டில் சிறுவளையம் சாலை முதல் பள்ளிப்பட்டறை சாலை வரை தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதையும், அதே ஊராட்சியில் முதல்வரின்கிராமசாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.13.90 இலட்சம் மதிப்பீட்டில் சிறுவளையம் சாலை முதல் ராமாபுரம் சாலை வரை சாலை அமைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு சாலையினை பெயர்த்து அதில் சேர்க்கப்பட்டுள்ள மூலப்பொருட்களின் கலவை விகிதம் சரியாக உள்ளதா? என்பதை ஆய்வு செய்தார். பின்னர், அவ்வூராட்சியில் VBG RAMG திட்டத்தின் கீழ் ரூ.25.40 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் குளம் வெட்டும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக மேற்கொள்ள அறிவுரை வழங்கினார். பின்னர் அவ்வூராட்சியில் 15வது நிதிக்குழுகிராமஊராட்சி நிதி ரூ.1.56 இலட்சம் மதிப்பீட்டில் கிடை மட்ட உறிஞ்சிக் குழி அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பெருவளையம் ஊராட்சியில் திடக்கழிவுமேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகள் தரம் பிரிக்கும் மையம் அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு. ஊராட்சிகளில் பெறப்படும் குப்பைகளை தரம் பிரித்து, மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கும் செயல்பாடுகளை முறையாக செயல்படுத்துமாறு அறிவுரை வழங்கினார். பின்னர், பெருவளையம் ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் பன்னியூர் பனப்பாக்கம் சாலை முதல் ராமாபுரம் சாலை வரை சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவ்வூராட்சியில்VBGRAMGதிட்டத்தின் கீழ் ரூ.24.21 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் குளம் வெட்டும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக மேற்கொள்ள அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுகளில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள்திரு.வெங்கடாசலம். திரு.பாஸ்கர், உதவி செயற்பொறியாளர் திரு. ஞானசேகரன், ஒன்றிய பொறியாளர் திருமதி. செவ்வந்தி. வட்டாட்சியர் செல்வி.மகாலட்சுமி, ஊராட்சி மன்ற தலைவர்கள் திருமதி.ருக்குமணி தயாளன், திரு.குமரேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், லாலாபேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் லாலாபேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு அறை உள்ளிட்டவட்டை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், மருந்தகத்தில் மருந்து இருப்பளவு, மருந்துகளின் காலாவதி, மருந்தகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் உள்ளிட்ட கேட்டறிந்தார். தற்பொழுது 2.83 கி.கி உள்ளதாகவும், இக்குழந்தைகளுக்கு தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் மோதிரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவர் தெரிவித்தார்.



ஆய்வு மேற்கொண்டார்.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் இன்று (09.10.2026) வாலாஜா வட்டம், லாலாபேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது கர்ப்பபை வாய் பரிசோதனை அறை, கண் பரிசோதனை அறை, புறநோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, கழிவறை ஆரம்ப சுகாதார நிலைய வளாகம், பிரசவ வற்றை ஆய்வு செய்தார். பின்னர், நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்தும், நோயாளிகளுக்கான அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, சிகிச்சைக்கு வரும் பொதுமக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை வழங்க வேண்டுமென அறிவுருத்தினார்.

தொடர்ந்து பிரசவ அறையில் இரட்டை குழந்தைகள் குறை மாதத்தில் எடை குறைவாக பிரசவம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருவதை பார்வையிட்டு, குழந்தைகளின் தற்போதைய எடை அளவு குறித்து தார்.

மேலும் 14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள விவரங்கள் குறித்தும், தடுப்பூசி ஒதுக்கப்பட்டுள்ள அளவு குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர் இவ்வளாகத்தில் நியாய விலை கடை கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வினில் வட்டார மருத்துவ அலுவலர் மரு.கனிமொழி, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சிங்கிலிமேடு ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீ வேணுகோபால் சுவாமி திருக்கோயிலுக்கு கூம்பு வடிவ குழல் ஒலிபெருக்கி



மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சி சிங்கிலிமேடு கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீ வேணுகோபால் சுவாமி திருக்கோயிலில் ஆன்மிக செய்திகளையும், ஆலயம் தொடர்பான அனைத்து நற்காரியங்களையும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக சிவசிவ அன்பே சிவம் அறக்கட்டளையின் நிறுவனரும் ஆன்மீக சிந்தனையாளருமான சிவ பாலகிருஷ்ணன் ஏற்பாட்டில் ரூ. 35,000 மதிப்பீட்டில் கூம்பு வடிவ குழல் ஒலிபெருக்கியை நன்கொடையாக வழங்கினார்.

இந்நிகழ்வில் ஆலய நிர்வாகிகளும், ஆன்மிக சிந்தனையாளர்களும் கலந்து கொண்டு சிவ பாலகிருஷ்ணனை வாழ்த்தினர்.

## பழனி அருகே பள்ளிக் குடிநீர் தொட்டியில் மலம் கலந்த விவகாரம்:

# விளையாட்டுத்தனமாகச் செய்த 2 சிறுவர்கள்; எஸ்.பி. ஜெயக்குமார் பேட்டி

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே மானூர் ஊராட்சி ஒன்றிய தொடர்ந்து, பெற்றோர்கள் மற்றும் கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்



தொடக்கப்பள்ளியில் 120க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். பள்ளி குடிநீர் தொட்டியில் மலம் கலந்ததாகப் புகார் எழுந்ததைத் டனர்.

இதுகுறித்து கீரனூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரின் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். 40 க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத்தியதில், 11 மற்றும் 12 வயதுடைய இரண்டு சிறுவர்கள் எவ்வித உள்நோக்கமும் இன்றி விளையாட்டுத்தனமாக இச்செயலில் ஈடுபட்டது தெரியவந்துள்ளதாக திண்டுக்கல் மாவட்ட எஸ்.பி. ஜெயக்குமார் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பழனி துணை கண்காணிப்பாளர் தேவராஜ், காவல் ஆய்வாளர்கள் சத்தியமூர்த்தி வெங்கடாசலம் உதவி ஆய்வாளர் மணி மற்றும் காவல்துறையினர் உடன் இருந்தனர்..

மேலும், இச்சம்பவம் தொடர்பாக விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.



# செய்யாறு நகரில் கால்நடைகள் தொல்லைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்! தொலைதூரப் பேருந்து வசதியை மீண்டும் தொடங்க வேண்டும்

## சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் தலைமையிலான கூட்டத்தில் வியாபாரிகள் வலியுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு திருவத்திபுரம் நகராட்சியில் நகரின் வளர்ச்சியை மேம்படுத்துதல், பொதுமக்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் மற்றும் வணிகர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்தல் தொடர்பான நகர வளர்ச்சி ஆலோசனைக் கூட்டம் சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் தலைமையில் நடைபெற்றது. நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நகராட்சி ஆணையர் ஆண்ட்ரூஸ், செய்யாறு வட்டாட்சியர் க்ஷ. திருவேங்கடம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் நகர வியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, நகரின் வளர்ச்சி மற்றும் வணிகர்களின் வாழ்வாதாரம் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் பேசிய வியாபாரிகள், செய்யாறு நகரில் ஆடு, மாடு, நாய்கள் உள்ளிட்ட கால்நடைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், இதனால் பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். எனவே, சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும், நிறுத்தப்பட்ட தொலைதூரப் பேருந்து சேவையை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதன் மூலம் வெளியூர் பயணிகள், வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடைவார்கள் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

செய்யாறு நகராட்சி மார்க்கெட் பகுதியில் உள்ள வணிகக் கடைகளை வியாபாரிகள் எளிதில் பெறும் வகையில், குறைந்த விலையில் கடைகள் கிடைக்க நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இதனால் சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன், சந்தைப் பகுதியின் வணிக நடவடிக்கைகளும் அதிகரிக்கும் எனத் தெரிவித்தனர்.

அதேபோல், ஆரணி கூட்ரோடு பகுதியில் உள்ள மின்வாரிய அலுவலகத்தின் முன்பாகச் செயல்பட்டு வரும் மீன் கடைகளை அகற்ற வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தனர். அப்பகுதியில் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு ஏற்படும் இடையூறுகளைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். வியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைகளைக் கேட்டறிந்த சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் தலைமையிலான கூட்டத்தில், நகரின் அடிப்படை வசதிகள், போக்குவரத்து, சந்தை நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் வருவாய்த் துறை, நகராட்சி நிர்வாகம், மின்வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர். நகரின் வளர்ச்சிக்கும், வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கும் தீர்வு காண்பது தொடர்பாக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

# திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை 3300 கிலோ புகையிலை பறிமுதல்; எஸ்பி ஜெயக்குமார் ஐபிஎஸ்



திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சம்பைபட்டியில் 498 கிலோ புகையிலை பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் மாவட்ட எஸ்பி ஜெயக்குமார் ஐபிஎஸ், நத்தம் காவல் நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் குட்கா கடத்தல் வண்டி நத்தம் பகுதிக்கு வருவதாக எங்களுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் நத்தம் போலீசார்கள் விரைந்து சம்பைப்பட்டி பகுதியில் வேனை பறிமுதல் செய்ததாகவும், மேலும் மாவட்டத்தில் 318 வழக்குகள் பதிவு செய்யபட்டு இதுவரை 3300 கிலோ புகையிலை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றும் எஸ்பி தெரிவித்தார். அப்போது இன்ஸ்பெக்டர் பொன்குணசேகரன், சப்இன்ஸ்பெக்டர் அபினேஷ் உள்ளிட்ட போலீசார்கள் உடனிருந்தனர்.

# மாணவியர் விடுதிகளில் உணவின் தரம், தூய்மை, அடிப்படை வசதிகள் குறித்து ஆட்சியர் வந்தனா கார்க் அதிரடி ஆய்வு

## மாணவிகளிடம் நேரில் குறைகளைக் கேட்டறிந்தார்

திருவண்ணாமலை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் சமூக நீதி மாணவியர் விடுதிகளில் உணவின் தரம், சுகாதாரம், அடிப்படை வசதிகள் மற்றும் மாணவிகளின் பாதுகாப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, விடுதிகளில் வழங்கப்படும் உணவின் தரத்தை உறுதி செய்யவும், வளாகத்தைத் தூய்மையாகப் பராமரிக்கவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், 09.10.2026 அன்று திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் பின்புறம் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் சமூக நீதி மாணவியர் விடுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, விடுதிகளில் மாணவிகளின் வருகைப் பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றனவா, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் போதுமான அளவில் உள்ளனவா, கழிவறைகள் முறையாகச் சுத்தம் செய்யப்படுகின்றனவா, விடுதி வளாகம் சுகாதாரமான முறையில் பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்தார்.

மேலும், விடுதிகளில் மாணவிகளுக்கு வழங்கப்படும் இரவு உணவின் தரம் மற்றும் உணவு வழங்கப்படும் முறைகள் குறித்தும் கேட்டறிந்தார். மாணவிகளிடம் நேரடியாகப் பேசிய மாவட்ட ஆட்சியர், அவர்களுக்குக் கிடைக்கும் வசதிகள், எதிர்கொள்ளும் சிரமங்கள் மற்றும் தேவைகள் குறித்து தனித்தனியாகக் கேட்டறிந்து, அவர்களின் கோரிக்கைகளையும் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து, விடுதிகளில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை ஆய்வு செய்த அவர், அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இருப்பு விவரங்களைக் கேட்டறிந்தார். கூட்டுறவுத் துறை மூலம் விடுதிகளுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அனைத்தும் உரிய காலத்திற்குள் முறையாக வழங்கப்படுகின்றனவா என்பது குறித்தும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விசாரித்தார்.

விடுதிகளில் மாணவிகளுக்கு உணவு முறையாகவும் தரமாகவும் வழங்கப்பட வேண்டும் என்றும், வளாகத்தின் சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். மாணவிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உறுதி செய்து, அவர்களின் குறைகளுக்குத் தீர்வு காண உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் செந்தில்குமரன், திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகன்ராமன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் அரண்மனை வளாகத்தில் நடைபெற்ற திருவிதாங்கூர் மன்னரின் உடைவாள் கைமாற்றம் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.பிரதாப், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்கள். உடன் கேரள மாநில சுகாதார மற்றும் தேவஸ்வம் அமைச்சர் திரு.கே.முரளீதரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அன்ஷூல் நாகர்,இ.கா.ப.,பத்மநாபபுரம்சட்டமன்றஉறுப்பினர்திரு.ஆர்.செல்லசுவாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஹரியேந்திரன் (பாறசாலை), திரு.ஆர். பைஜூ (காட்டாக்கடை), திரு.எம்.வின்சன்ட் (கோவளம்), பத்மநாபபுரம் சார் ஆட்சியர் Lt Ctr.டி.மாலதி, இ.ஆ.ப., உட்பட பலர் உள்ளார்கள்.



திண்டுக்கல்லில் பள்ளி மாணவ, மாணவிகள் பாதுகாப்பாகவும் கூட்ட நெரிசல் இன்றியும் பயணிக்கும் வகையில் பள்ளி மாணவர்களுக்கான சிறப்பு பேருந்தை திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அய்யனார் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

# தூய்மைப் பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு முதல் நலவாரிய அடையாள அட்டை வரை ஒரே இடத்தில் பல்வேறு சேவைகள்

## 548 பேர் பயன்பெற்ற முகாமை ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

தூய்மைப் பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு முதல் நலவாரிய அடையாள அட்டை வரை ஒரே இடத்தில் பல்வேறு சேவைகள்! 548 பேர் பயன்பெற்ற முகாமை ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நடைபெற்றபாதுகாப்புமற்றும் நலத்திட்ட முகாமை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார். இம்முகாமில் 548 தூய்மைப் பணியாளர்கள் பங்கேற்று பல்வேறு நலத்திட்டச் சேவைகளைப் பெற்றனர். திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட கலைஞர் பல்நோக்கு அரங்கத்தில், மாநகராட்சி நிர்வாக இயக்குநரகம் சார்பில் 09.10.2026 அன்று தூய்மைப் பணியாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட முகாம் நடைபெற்றது. இதனை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டச் சேவைகளைப்பார்வையிட்டார்.




இம்முகாமில் திருவண்ணாமலை மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தரத் தூய்மைப் பணியாளர்கள், ஒப்பந்தத் தூய்மைப் பணியாளர்கள்மற்றும்டெங்குகொசு ஒழிப்புப் பணியாளர்கள் கலந்துகொண்டனர். தூய்மைப் பணியாளர்களின் நலனைப் பாதுகாப்பதுடன், அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் எளிதில் கிடைக்கும் வகையில் பல்வேறு துறைகள் சார்பில் சேவைகள் வழங்கப்பட்டன.

தாட்கோ சார்பில், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் பொது மருத்துவப் பரிசோதனை, இரத்த அழுத்தம் மற்றும் ரத்தச் சர்க்கரை அளவைக் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், எக்ஸ்ரே மூலம் காசநோயைக் கண்டறிதல், தொழுநோயைக் கண்டறிதல் உள்ளிட்ட மருத்துவச் சேவைகளும் வழங்கப்பட்டன.

வீட்டு வசதி வாரியம் சார்பில் வீட்டு வசதி தொடர்பான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. வங்கிகள்சார்பில் வங்கிக் கணக்குகள் தொடங்குவதற்கான சேவைகள் வழங்கப்பட்டன. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் புதிய குடும்ப அட்டை பெறவும், ஏற்கெனவே உள்ள குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்கவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

மேலும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருந்த தூய்மைப் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் மருத்துவக் காப்பீட்டு அட்டைகளை வழங்கினார். இதன் மூலம் தூய்மைப் பணியாளர்கள் அரசின் மருத்துவக் காப்பீட்டு வசதிகளைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

தூய்மைப் பணியாளர்களின் உடல்நலப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் அடிப்படைத் தேவைகளை ஒருங்கிணைத்து நிறைவேற்றும் நோக்கில் நடைபெற்ற இம்முகாமில் மொத்தம் 548 பேர் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட சுகாதார அலுவலர் வெங்கட்ரமணன், மாநகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியன், திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகன்ராமன் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தேசபக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779

# புழல் எம்ஜிஆர் நகரில் சாலையை சீரமைத்து தர வலியுறுத்தி அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வனை பொதுமக்கள் முற்றுகை

சென்னை மாநகராட்சி மாதவரம் மண்டலத்திற்கு உட்பட்ட 23, 24, 30, 31வது வார்டுகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை வணிக வரித்துறை மற்றும் பத்திரப்பதிவு துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வன் ஆய்வு மேற்கொண்டார்.



31வது வார்டுக்குட்பட்ட புழல் அடுத்த எம்ஜிஆர் நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாய் பணிகளை பார்வையிட்ட அமைச்சர் லோகேஷ் அடுத்த இடத்திற்கு தமது காரில் ஏறி புறப்பட்டார். அப்போது குடியிருப்பு வாசிகள் அவரது காரை வழி மறித்து முற்றுகையிட்டனர்.

எம்ஜிஆர்நகரில்மழைநீர் மற்றும் கழிவுநீர் கால்வாய் பணிகள் முடிவடைந்த பிறகும் பல மாதங்களாக சாலை குண்டும் குழியுமாக இருப்பதால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவ்வப்போது வாகனங்களில் செல்வோர் தவறி விழும் சூழ்நிலை ஏற்படுவதாகவும்கூறி அமைச்சரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தற்போது பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை ஆய்வு செய்வதாகவும், விரைவில் சாலையை சீரமைத்து தருவதாகவும், அதிகாரிகள் அனைவரும் தன்னை விட்டுவிட்டு அடுத்த இடத்திற்கு ஆய்விற்கு சென்று விட்டதாக குடியிருப்புவாசிகளிடம் கூறிவிட்டு அங்கிருந்து நழுவி சென்றார்.

ஆய்விற்கு வந்த அமைச்சரிடம் சாலையை சீரமைத்து தருமாறு கூறி குடியிருப்புவாசிகள் முற்றுகையிட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த ஆய்வின் போது மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூத் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய் பிரபு, 31வது வார்டு மாமன்ற உறுப்பினர் சங்கீதா பாபு உள்ளிட்ட அரசு அதிகாரிகள், தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில்

# மாவட்ட அளவிலான வன்கொடுமை தடுப்பு விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழுவின் மூன்றாம் காலாண்டு குழு கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வி.வி.சாய் பிரணீத் ஆகியோர் தலைமையில்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலககூட்டரங்கில்மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மாவட்ட அளவிலான வன்கொடுமை தடுப்பு விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழுவின் மூன்றாம் காலாண்டு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வி.வி.சாய் பிரணீத் ஆகியோர் தலைமையில் நடைப்பெற்றது.

சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.விஜயகுமார்(கும்மிடிப்பூண்டி), ஆர்.பிரகாசம் (பூவிருந்தவல்லி), மரு.எம்.எஸ். ரவி (பொன்னேரி), மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், திருவள்ளூர் சார் ஆட்சியர் மரு.எஸ்.பிரசாந்த், திருத்தணி உதவி காவல் கண்காணிப்பாளர் சுபம் திமன், வருவாய் கோட்டாட்சியர்கள் ராஜகோபால் (திருத்தணி), முருகவேல் (பொ) (பொன்னேரி), காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் பி.பி.ஜூலியஸ்சீசர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செந்தில்குமார், பட்டாபிராம் உதவி ஆணையர் (சட்டம் ஒழுங்கு) கண்ணன், துணை ஆட்சியர் (பயிற்சி) ச.சபரிகிருஷ்ணன், மாவட்ட அளவிலான வன்கொடுமை தடுப்பு விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

தேனி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் காலியாக உள்ள உதவி வரவேற்பாளர் பணியிடத்திற்கு தகுதிவாய்ந்த பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இப்பணிக்கு முழுமையாக பார்வைத்திறனற்றவராகவும், 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும், 40 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேலும், இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் நாற்காலி வயர் பின்னுதலில்ஒருவருடகாலஅனுபவம்பெற்றிருக்கவேண்டும்.வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அந்த பதிவட்டை, பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) என்பதற்கான சான்று, மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை (UDID Card), ஆதார் அட்டை, குடும்ப உணவு வழங்கல் அட்டை, பணியிடத்திற்கு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் புகைப்படம் 2 ஆகிய சான்றுகளுடன் காலியாக உள்ள உதவி வரவேற்பாளர் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் 29.10.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பித்திட வேண்டும் என மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.
மாவட்ட ஆட்சித்தலைவர்

# பாடியநல்லூரில் தவெக சார்பில் 80 அணிகள் பங்கேற்ற ஆண்கள், பெண்களுக்கான கபடி போட்டி

மாதவரம் சட்டமன்ற தொகுதி திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம் பாடியநல்லூர் பேரூராட்சி, சோழவரம் கிழக்கு ஒன்றியம், தமிழக வெற்றிக் கழகம் டிவைன் ஃபிளேம்ஸ் விளையாட்டு பயிற்சி மையம் சார்பில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கபடி போட்டி செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஊராட்சி அருள்மிகு முனீஸ்வரர் ஸ்ரீ அங்காள ஈஸ்வரி ஆலய திடலில் நடைபெற்ற இப்போட்டிக்கு மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர்தென்மேற்கு மாவட்ட செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு தலைமையேற்று கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசு தொகைகளை வழங்கினார்.




இப்போட்டிகளை தவெக நிர்வாகி வசந்தபிரியா மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். இப்போட்டிகளில் ஆண்கள், பெண் அணி என 80க்கும் மேற்பட்ட அணிகள் விளையாடினர்.

ஆண்கள் அணியில் ஆர்டி. செலக்ட் முதல் இடத்தைப் பிடித்து ரூ. 15,000மும், என்கேஎம். வளவன் செலக்ட் இரண்டாம் இடத்தை வென்று ரூ. 12,000மும், டிஎஃப் எஸ்ஏமூன்றாம்இடத்தை வென்று ரூ. 10,000மும், ஏஜிஎம் ஆர்எஸ் பிரதர்ஸ் நான்காம் இடத்தை வென்று ரூ. 8,.000மும் வென்றனர்.

பெண்கள் அணியில் நஸ்ரத் கல்லூரி முதல் இடத்தைப் பிடித்து ரூ. 10,000மும், பழவேற்காடு குயின்ஸ் இரண்டாம் இடத்தை வென்று ரூ. 8,000மும், ஹெச்பி சிஸ்டர்ஸ் மூன்றாம் இடத்தை வென்று ரூ. 5,000மும், டிவைன் நான்காம் இடத்தை வென்று ரூ. 5,.000மும் வென்றனர். 5,6,7,8 இடங்களைப் பிடித்த அணிக்கு தலா ரூ. 1000மும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடியநல்லூர் பேரூராட்சி செயலாளர் முத்துக்குமார் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# பழனியில் வெகு விமர்சையாக நடைபெற்ற விஸ்மோனி நிதி நிறுவனம் கிளை தொடக்க விழா

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் விஸ்மோனி நிதி நிறுவனம் தனது 369 வது கிளையை தொடங்கியது. கொச்சின் மாநகரில் தனது நிறுவனத்தை தொடங்கிய விஸ்மோனி இன்று இந்தியாவில் 369 கிளைகளை கொண்டுள்ளது.




முன்னதாக பழனி பகுதி மக்கள் இந்த நிதி நிறுவனத்தின் மூலம் பயணத் தீர்வுகளை நேரடியாக பெற முடியும். குறிப்பாக 8 நிமிடங்களில் தங்க நகை கடன் பெற முடியும். மேலும் நிதி மற்றும் பயண தீர்வுகளை அனைத்து தரப்பு மக்களும் எளிதாகவும் பாதுகாப்பாகவும் அணுகக் கூடிய வகையில் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

அதுமட்டுமின்றி வெளிநாடுகளுக்கு பணம் அனுப்புதல், அந்நிய செலவாணி, பல நாணய பயண அட்டை பயணம், டிஜிட்டல் கொடுப்பனவுகள், காப்பீடு போன்ற சேவைகளையும் இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

தொடர்ந்து சமூக பொறுப்புணர்வுடன் செயல்படும் இந்த நிறுவனம் பழனியில் உள்ள அவார்ட் அறிவுசார் மாற்றுத்திறனாளிகள் பள்ளிக்கு தண்ணீர் சுத்திகரிப்பான் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு பள்ளி பைகளை வழங்கினர்.

முன்னதாக வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப நல் மதிப்பை பெற்றதன் அடிப்படையிலேயே நிறுவனம் மேலும்மேலும்வளர்ந்து மக்களுக்கு சேவையாற்றி வருகிறது என நிறுவனத்தின் இயக்குனர் கிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் திறப்பு விழாவில் மேத்யூ, சதீஷ்குமார், ரதீஷ் பிரகாஷ் ,பாஸ்கர், ஜான் சார்ஜ், டைட்டஸ் , பாலகிருஷ்ணன் , ஜீவிதா மற்றும் உள்ளூர் பிரமுகர்கள், வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA